




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | YouTube VARALARUU | 7502051351








புதன் ❖ ஏப்ரல். 26, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 201 ❖ ரூ.10


‘மல்யுத்த வீராங்கனைகளின் குற்றச்சாட்டுகள் தீவிரமானது’

# நோட்டீஸ்

## பாஜக எம்பி பிரிஜ் பூஷன் சரண் சிங், பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் டெல்லி போலீஸ் பதில் அளிக்கவும் வழக்கை பட்டியலிடும் உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, ஏப். 26-

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங் மீதான பாலியல் குற்றச்சாட்டு தொடர்பாக காவல்துறை எஃப்ஐஆர் பதிவு செய்ய இந்திய மல்யுத்த வீராங்கனைகள் தாக்கல் செய்த மனு மீது பதில் அளிக்கும் படி டெல்லி காவல்துறைக்கு உச்ச நீதிமன்றம் நேற்று நோட்டீஸ் அனுப்பி உள்ளது.



இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரும், பாஜக எம்பியுமான பிரிஜ் பூஷன் சரண் சிங், மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கடந்த ஜனவரி மாதம் புகார் எழுந்தது. இதையடுத்து இந்தியாவின் முன்னணி மல்யுத்த வீராங்கனைகள் வினேஷ் போகத், சாக்சி மாலிக், சங்கீதா போகத், மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா உள்ளிட்டோர், பிரிஜ்பூஷன் சிங்கிற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது விளையாட்டுத் துறை அமைச்சகம் குறுக்கிட்டு விசாரணை ஆணையம் அமைத்தது.

மேரி கோம் தலைமையிலான ஆணையம் விசாரணை அறிக்கையையும் தாக்கல் செய்துவிட்டது. எனினும், அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம் சாட்டி, மல்யுத்த வீரர், வீராங்கனைகள் மீண்டும் டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், பாலியல் குற்றச்சாட்டு புகார் தொடர்பாக மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்படவேண்டும் என்று கோரி ஏழு மல்யுத்த வீராங்கனைகள் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனு செவ்வாய்க்கிழமை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட், நீதிபதி பிஎஸ் நரசிம்ஹா அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், சர்வதேச அரங்கில் இந்தியாவை பிரதிநிதித்துவப் படுத்திய வீராங்கனைகளின் இந்த குற்றச்சாட்டு மிகவும் தீவிரமானது. அந்த மனு மீது டெல்லி போலீஸ் பதில் அளிக்க நோட்டீஸ் அனுப்பவும் வழக்கை வெள்ளிக்கிழமைக்கு பட்டியலிடும்படியும் உத்தரவிட்டனர். மேலும், மனுதாக்கல் செய்த வீராங்கனைகளின் அடையாளம் தெரியாதவகையில், நீதித்துறை ஆவணங்களில் இருந்து அவர்களின் பெயர்களை நீக்கவும் உத்தரவிட்டனர்.

முன்னதாக பெண் மல்யுத்த வீராங்கனைகள் பயிற்சியாளர்களால் பல ஆண்டுகளாகப் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகி வருவதாகக் கூறி கடந்த ஜனவரியில் போராட்டத்தில் ஈடுபட்ட மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் ஞாயிற்றுக்கிழமை மீண்டும் தனது ஆதரவாளர்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டார். பாலியல் தொல்லை குறித்த தங்களின் புதிய புகார் மீது முதல் தகவல் அறிக்கைகூட பதிவு செய்யாததைக் கண்டித்தும், ஏற்கெனவே நடந்த விசாரணைக் குழுவின் அறிக்கை விவரத்தைக் கோரியும் வீராங்கனைகள் போராட்டம் நடத்தினர்.

## வி.பி.ராமன் சாலை பெயர் பலகையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்







சென்னை, ஏப். 26-

மறைந்த வி.பி.ராமன், முன்னாள் இந்திய கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் ஒன்றிய அரசின் சட்ட அலுவலராக நியமிக்கப்பட்ட முதல் தென்னிந்தியராகவும், பின்னர் தமிழ்நாடு அரசின் அட்வகேட் ஜெனரலாகவும், அவர் இறக்கும் நாள் வரை இந்திய வழக்கறிஞர் கழகத்தின் முன்னணி உறுப்பினராகவும் இருந்தார். சட்டக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். பேரறிஞர் அண்ணாவின் கொள்கையில் பெரிதும் ஈர்க்கப்பட்டு திராவிட இயக்கத்தில் சேர்ந்து செயல்பட்டார். பேரறிஞர் அண்ணாவின் ஆங்கில இதழான ஹோம் லேண்ட் இதழின் துணை ஆசிரியர் என்று பல பொறுப்புகளை வகித்தார்.

கலைஞர் மற்றும் சமகாலத்து தலைவர்களின் பேரன்பையும் நன்மதிப்பையும் பெற்றவராகவும் திகழ்ந்தார். கல்வி மட்டுமின்றி, கர்நாடக இசை, ஆங்கில இலக்கியம், கிரிக்கெட் என்று பன்முகத் திறன் கொண்டவராகவும் விளங்கினார். வி.பி. ராமனுக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில், மெரினா கடற்கரை காமராஜர் சாலை முதல் இந்தியன் வங்கி தலைமை அலுவலகம் வரை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லக்கூடிய அவ்வை சண்முகம் சாலை என பெயரிடப்பட்டுள்ள சாலைப்பகுதியினை "வி.பி. ராமன் சாலை" என தமிழ்நாடு அரசால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வி.பி. ராமன் வாழ்ந்த லாயிட்ஸ் கார்னர் இல்லமும் இப்பகுதியிலே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மேயர் பிரியா, தலைமைச் செயலாளர் இறையன்பு, மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் வி.பி. ராமனின் மகன்கள் வழக்கறிஞர் பி.எஸ். ராமன், பி.வி. மோகன் ராமன், பி.ஆர். ராமன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், காணொலிக் காட்சி வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் மதன்மோகன், வி.பி. ராமனின் மனைவி கல்பகம் ராமன் மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டையில் அரசு திட்டப் பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் அமைச்சர்கள் பங்கேற்பு

புதுக்கோட்டை, ஏப். 26-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், அரசு திட்டப் பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம், சட்ட அமைச்சர் எஸ். ரகுபதி, காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேற்று மேற்கொண்டார்கள். இக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு தலைமையில் நடைபெற்றது.




தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் நலத் திட்டங்களில் பணி முன்னேற்றம் குறித்தும் அனைத்துத்துறை அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், வருவாய்த்துறையின் சார்பில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் இலவச வீட்டுமனைப் பட்டா எண்ணிக்கைகள், பட்டா மாற்றம், இணையவழி மூலம் வழங்கப்படும் வருவாய்த்துறை சார்ந்த சான்றிதழ்கள் குறித்தும், முதியோர் உதவித்தொகை பெற்று வரும் பயனாளிகள் குறித்தும், ஊரக வளர்ச்சித்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்படும் வேலைநாட்கள், செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் பாரத பிரதமரின் வீடு கட்டும் திட்டம், பள்ளிகளின் கட்டமைப்புகள் சாலை மேம்பாட்டுத் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், ஜல் ஜீவன் மிஷன் திட்டம் குறித்தும், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் குறித்தும், நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், நமக்கு நாமே திட்டம், அம்ரூட் 2.0 திட்டம், பாதாள சாக்கடை திட்டம், குடிநீர் வழங்கும் பணிகள் குறித்தும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், மக்களைத் தேடி மருத்துவம், சிறார் கண்ணொளித் திட்டம் குறித்தும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் புதுமைப்பெண் திட்டம், குழந்தை திருமணங்கள் தடுப்பு, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் குறித்தும், பள்ளிக்கல்வித்துறை சார்பில் எண்ணும் எழுத்தும் திட்டம், பள்ளிகளின் கட்டமைப்புகள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் முதல்வரின் முகவரித் திட்டம், நான் முதல்வன் திட்டம், நகரப் பேருந்துகளில் பெண்கள் இலவச பேருந்து பயணத்திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முதலமைச்சரால் திராவிட மாடலின்கீழ் எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்கள் பல்வேறு துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் மூலம் தகுதியான நபர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடையவும், பொதுமக்கள் அனைவரும் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையில் செயலாற்ற வேண்டும் என சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நெடுஞ்சாலை நிலமெடுப்பு) பெ.வே. சரவணன், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (காவேரி-வைகை-குண்டாறு) ஆர். ரம்யாதேவி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நா.கவிதப்பிரியா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி, வருவாய் கோட்டாட்சியர்கள், நகர்மன்றத் தலைவர்கள், ஒன்றியக்குழுத் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தூத்துக்குடி அருகே மணல் கடத்தலைத் தடுக்க தீவிரம் காட்டிய கிராம நிர்வாக அலுவலர் படுகொலை

தூத்துக்குடி, ஏப். 26-

தூத்துக்குடி அருகே மணல் கடத்தலுக்கு இடையூறாக இருந்த கிராம நிர்வாக அலுவலர் வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர், எஸ்.பி நேரில் விசாரணை நடத்தினர்.





தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை அருகேயுள்ள சூசைபாண்டியாபுரத்தைச் சேர்ந்த யேசுவடியான் மகன் லூர்து பிரான்சிஸ் (53). இவர் ஸ்ரீவைகுண்டம் வட்டம் முறப்பநாடு கோவில்பத்து கிராம நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வந்தார். நேற்று மதியம் 12.30 மணியளவில் தனது அலுவலகத்தில் இருந்தார். அப்போது அலுவலகத்துக்குள் வந்த 2 நபர்கள், திடீரென மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து லூர்து பிரான்சிஸை சரமாரியாக வெட்டியுள்ளனர். இதில் ரத்த வெள்ளத்தில் அவர் கீழே சாய்ந்த நிலையில் 2 நபர்களும் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த லூர்து பிரான்சிஸை அக்கம் பக்கத்தினர் மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் உடனடியாக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், அங்கு சிகிச்சை பலனின்றி லூர்து பிரான்சிஸ் பிற்பகல் 2.40 மணியளவில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் மாவட்ட ஆட்சியர் கி.செந்தில் ராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எல். பாலாஜி சரவணன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினர். தொடர்ந்து, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று லூர்து பிரான்சிஸ் உடலை பார்வையிட்டு அஞ்சலி செலுத்தினர். லூர்து பிரான்சிஸ் மனைவி மற்றும் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட ஆட்சியர் கி.செந்தில் ராஜ் கூறியது: “கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் துணிச்சலும், நேர்மையும் கொண்ட அரசு அலுவலர். இதற்கு முன்பு அவர் ஆதிச்சநல்லூரில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றினார். அங்கு அருங்காட்சியம் அமைக்க தேர்வு செய்யப்பட்ட அரசுக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்புகள் இருந்ததை கண்டறிந்து துணிச்சலாக அவைகளை அகற்றி இடத்தை மீட்டு கொடுத்துள்ளார். அப்போதும் சிலர் அவர் மீது தாக்குதல் நடத்த முயன்றார்கள். இது தொடர்பாக காவல் துறை மூலம் நடவடிக்கை எடுத்து அந்த நபர்களை குண்டர் சட்டத்தில் அடைத்தோம்.

அத்தகைய நேர்மையான அலுவலர் தற்போது கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் தொடர்புடையவர்களுக்கு கடுமையான தண்டனை கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். மணல் திருட்டு தொடர்பாக அவர் காவல் துறையில் புகார் அளித்ததால் இந்தக் கொலை நடந்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாகவும் விரிவாக விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார் ஆட்சியர்.


### ரூ.1 கோடி நிவாரணம்

இது தொடர்பாக முதல்வர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: “தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் வட்டம், முறப்பநாடு கோவில்பத்து கிராம நிர்வாக அலுவலர் லூர்து பிரான்சிஸ் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது இரண்டு நபர்கள் அரிவாளால் வெட்டியுள்ளனர். தலை மற்றும் கைகளில் பலத்த காயமுற்ற லூர்து பிரான்சிஸ் அவசர சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்துள்ளார்.

இவரைத் தாக்கிய இரு நபர்களில் ராமசுப்பு என்பவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கொடிய சம்பவத்தில் உயிரிழந்த லூர்து பிரான்சிஸ் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், லூர்து பிரான்சிஸ் குடும்பத்தினருக்கு அரசு சார்பாக உடனடியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1 கோடி நிதியுதவியும், அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு பணி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்” என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

“ உங்களுக்குள் நீங்கள் நல்ல சமநிலையுடன் இருக்கும்போது மட்டும்தான், உங்கள் புத்திசாலித்தனம், திறமை மற்றும் ஆற்றல் முழுமையாக வெளிப்படும்.”




# ஆதனக்கோட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் சித்திரைத்திருவிழா கோலாகலம்



ஆதனக்கோட்டை, ஏப்.26–

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டையில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் சித்திரைத்திருவிழா கடந்த 16 ம் தேதி காப்புக்கட்டுதலுடன் தொடங்கி அதி விமரிசையாக நடைபெற்று வருகின்றது. திருவிழாவின் முக்கிய நிகழ்வான (திங்கட்கிழமை) ஆதனக்கோட்டை மடத்துக்கடை, பழைய ஆதனக்கோட்டை, கன்டியன்பட்டி, சொக்கநாதபட்டி, சோத்துப்பாழை, கல்லுக்காரன்பட்டி, கணபதிபுரம், வண்ணாரப்பட்டி, குப்பையன்பட்டி, கருப்புடையான்பட்டி, கூத்தாச்சிப்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பக்தர்கள் கரும்பால் தொட்டி கட்டியும் தீ மிதித்தும் பால்குடம் எடுத்தும் அலகு குத்தியும் பறவைக் காவடி எடுத்தும் தாரை தப்பட்டை முழங்க ஆட்டம் பாட்டத்துடன் ஆதனக்கோட்டை மடத்துக்கடை வீதி வழியாக முத்துமாரியம்மன் ஆலயத்தை சுற்றி வலம் வந்து அம்மனுக்கு தாங்கள் வேண்டியிருந்த நேர்த்திக்கடனை செலுத்தினர்.

இரவு மின்னொளி வாகனத்தில் அம்மன் யாளி வாகனத்தில் வீதிஉலாவும் நடைபெற்றது. பக்தர்களுக்கு பசியைப் போக்குவதற்கு கிராமத்தார்கள் சார்பாக அண்ணதானம் நடைபெற்றது. இந்த தேர் திருவிழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். இரவு கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தாய்மாமன் போக்சோவில் கைது

சிதம்பரம் , ஏப்.26–

சிதம்பரம் முத்து மாணிக்க தெருவைச் சேர்ந்தவர் மகேஷ்ராவ் (வயது 40). பெயிண்டர் வேலை செய்யும் இவருக்கு திருமணம் ஆகவில்லை. இவரது தங்கைக்கு திருமணமாகி 5 வயது பெண் குழந்தை உள்ளது. இவரது கணவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால், சிதம்பரத்தில் உள்ள தனது தாயார் வீட்டில் வசித்து வருகிறார். இந்நிலையில் வீட்டில் இருந்த 5 வயது சிறுமிக்கு மகேஷ்ராவ்



பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதுபற்றி தகவல் அறிந்த அவரது தங்கை, மகேஷ்ராவை கண்டித்துள்ளார்.

இதனை பொருட்படுத்தாத மகேஷ்ராவ், தொடர்ந்து 5 வயது சிறுமிக்கு அடிக்கடி பாலியல் தொந்தரவு கொடுத்து வந்தார். இதனால் ஆத்திரமடைந்த மகேஷ்ராவின் தங்கை சிதம்பரம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகாரளித்தார். புகாரின் பேரில் விசாரணை நடத்திய இன்ஸ்பெக்டர் வனஜா, மகேஷ்ராவை போக்சோ வழக்கில் கைது செய்து சிறையில் அடைத்தார். தங்கையின் 5 வயது மகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த தாய்மாமன் போக்சோவில் கைது செய்யப்பட்ட சம்பவம் சிதம்பரம் நகரில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.






திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை-தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் ஒன்பது இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலைய கிடங்குகள் அமைப்பதற்கான பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சென்னையிலிருந்து காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். மேலும், கொடைக்கானவில் கூடுதலாக உணவுப் பொருட்களை பாதுகாக்க ரூ.2 கோடி மதிப்பீட்டில் 750 மெ.டன் கொள்ளளவு கொண்ட வட்ட செயல்முறை கிடங்கையும் திறந்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, 'திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கொடைக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் திண்டுக்கல் மண்டல மேலாளர் ரா.மொலின்பாரதி, துணை மண்டல மேலாளர் நலவழுதி, கொள்முதல் நிலைய அலுவளர் கே.என்.பாலன், உதவிப் பொறியாளர் சந்திரபோஸ் உட்பட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# அரியலூர் புத்தக திருவிழாவில் குழந்தைகளுக்கு பரிசு வழங்கல்

அரியலூர், ஏப்.26–

அரியலூரில் நடைபெற்ற இரண்டாம் நாள் புத்தக திருவிழாவில், மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி விளையாட்டு திடலில், அரியலூர் மாவட்ட நிர்வாகம், தமிழ் பண்பாட்டு பேரமைப்பு மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்தும், ஏழாவது புத்தகத் திருவிழாவில், இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக, மாவட்ட அளவில் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான மாற்றுடைப் போட்டிகள் நடைபெற்றன, அதைத் தொடர்ந்து மாலையில் நடைபெற்ற கருத்தரங்கில், அரியலூர் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் அன்பரசி வரவேற்றுப் பேசினார், விழாவுக்கு தலைமை வகித்த அரியலூர் மாவட்ட முதன்மை நீதிபதி எஸ்.மகாலட்சுமி, மாற்றுடைப்போட்டியில் தேர்வு பெற்ற மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான பரிசுகளை வழங்கி பேசினார். தமிழ் பேராசிரியர் நீலகண்டன், சென்னையைச் சேர்ந்த ரவிக்குமார் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர்.

அரியலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுருளி பிரபு தொகுத்து பேசிய இக்கருத்தரங்கில், சார்பு நீதிபதி அழகேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பூங்கோதை, அரியலூர் ஆர்டிஓ ராமகிருஷ்ணன், தாசில்தார் கண்ணன், மாவட்ட ஆட்சியரக தாசில்தார்கள் கிருஷ்ணமூர்த்தி, சந்திரசேகர் குமரய்யா, துணை தாசில்தார் காமராஜ், தமிழ் பண்பாட்டு பேரமைப்பு நிர்வாகிகள் பாலகிருஷ்ணன், புலவர் இளங்கோ, நல்லப்பன் ஆசிரியர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர், முடிவில் அரியலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அருளப்பன் நன்றி கூறினார்.

# ஆவுடையார்கோவில் அருகே 6 மாத காலமாக குடிநீர் தட்டுப்பாடு, 20க்கும் மேற்பட்ட கிராம மக்கள் காலி குடங்களுடன் சாலை மறியல்

ஆவுடையார்கோவில், ஏப்.26–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா புத்தாம்பூர், செங்கானம் ஆகிய ஊராட்சிகளை சேர்ந்த பேயாடிக்கோட்டை , செங்கானம், பறையத்தூர், இடையூர் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 800க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள மக்களுக்கு அடம்பூர் நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த 6 மாதத்திற்கும் மேலாக இப்பகுதி மக்களுக்கு முறையாக குடிநீர் வழங்கப்படவில்லையெனக்



கூறப்படுகிறது. இது தொடர்பாக சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாததையடுத்து ஆத்திரமடைந்த 20க்கும் மேற்பட்ட கிராம மக்கள் திருப்புனவாசல் கரூர் சாலையில் காலிக்குடங்களுடன் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தினை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த துறை அதிகாரிகள் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என உறுதியளித்தனர், அதிகாரிகளின் உறுதியளிப்பை தொடர்ந்து பொது மக்கள் தற்காலிகமாக கலைந்து சென்றனர், மறியல் போராட்டத்தால் திருப்புனவாசல் கரூர் சாலையில் 2மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# அரியலூரில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தொடர் முழக்கப் போராட்டம்



அரியலூர், ஏப்.26–

அரியலூரில் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், குடிமனைகளுக்கு செல்ல பாதை வசதி கேட்டு, தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற்றது.

அரியலூர் நகராட்சி அலுவலகத்திற்கு பின்புறம், 70க்கும் மேற்பட்ட குடிமனைகளுக்கு செல்வதற்கான, பாதை வசதி கேட்டு, மார்க்சிய கம்யூனிஸ்ட் சார்பில், தொடர் முழக்கப் போராட்டம் கட்சியின் மாவட்டச் செயலாளர் இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது, இதில் சிற்றம்பலம் வரவேற்று பேசினார்.

மா.கம்யூனிஸ்ட் கட்சியின் கீழ் வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, மாநில குழு உறுப்பினர் வாலண்டினா உள்ளிட்டோர் பேசிய இந்த தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்தில், சி ஐ டி யு மாவட்டச் செயலாளர் துரைசாமி, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி செயற்குழு உறுப்பினர்கள், மணிவேல், கிருஷ்ணன், அருணன், மகாராஜன், வெங்கடாசலம், பரமசிவம், கந்தசாமி, அம்பிகா, சந்தானம், திருமானூர் சௌரிராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# கந்தர்வக்கோட்டை ஒன்றிய அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் எண்ணும் எழுத்துப் பயிற்சி

கந்தர்வக்கோட்டை, ஏப்.26–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் எண்ணும் எழுத்தும் பயிற்சி தொடக்கநிலை ஆசிரியர்களுக்கு மூன்று நாட்கள் நடைபெறுகிறது.



எண்ணும் எழுத்தும் திட்டம் 1 முதல் 3 வகுப்புகளுக்கு நடைமுறையில் உள்ளது, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் எண்ணும் எழுத்தும் பயிற்சியை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன விரிவுரையாளர் ஆனந்தராஜ் தொடங்கி வைத்தார். இந்நிகழ்விற்கு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஷ்பனம் தலைமை வகித்தார், வட்டாரக் கல்வி அலுவலர் வெங்கடேஸ்வரி ஆசிரியர்களுக்கு பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக்கூறி வாழ்த்திப் பேசினார்.

முன்னதாக வட்டார வளமைய மேற்பார்வையாளர் பிரகாஷ் அனைவரையும் வரவேற்றார், மேம்படுத்தப்பட்ட, எண்ணு எழுத்தும் பயிற்சி அடுத்த கல்வி ஆண்டுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறுகிறது. இப்பயிற்சியில் குழு விளையாட்டு, பயிற்சி முறைகள் ஆங்கிலம் சொற்றொடர்களை வாசித்தல் கனிணித்திறனை ஊக்குவித்தல் உள்ளிட்டவற்றில் பயிற்சி வழங்கப்படுகிறது. தமிழ் பயிற்சியில் ஆசிரியர்கள் வனிதா, சண்முகம், பிளன்டா ஆனந்தி, சிவகாமி, கலைச்செல்வி ஆகியோர் கருத்தாளர்களாக செயல்பட்டனர். இதில் வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் சுரேஷ் குமார், சங்கிலி முத்து பாரதிதாசன், ராஜேஸ்வரி இல்லம் தேடிக் கல்வி திட்ட ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## 2,532-வது ஆண்டு ஆதிசங்கரர் ஜெயந்தி விழா

# நாடு முழுவதும் கொண்டாட்டம் காஞ்சி சங்கர மடம் ஏற்பாடு செய்திருந்தது

காஞ்சிபுரம் , ஏப்.26–

அத்வைத தத்துவத்தை உலகத்திற்கு நிலைநாட்டியவர் ஆதிசங்கரர். இவரது 2532–வது ஜெயந்தி விழா நேற்று கொண்டாடப்பட்டது. கடந்த சில நாட்களுக்கு முன்பே ஆதிசங்கரர் ஜெயந்தி விழா தொடங்கி சிறப்பாக நடந்து வருகிறது. திருப்பதியில் உள்ள விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆதிசங்கரர் சிலைக்கு சிறப்பு வழிபாடு நடத்தினார்.

இதேபோல் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நாடுமுழுவதும் சங்கரர் ஜெயந்தி விழாவை கொண்டாட காஞ்சி சங்கரமடம் ஏற்பாடு செய்துள்ளது. ஆதி சங்கரரின் சத்தியம், ஒருமைப்பாடு மற்றும் மத நல்லிணக்கத்தை பரப்புவதே இதன் நோக்கம் என்று அவர்கள் தெரிவித்து உள்ளனர். காஞ்சசிபுரம் காமாட்சி அம்மன் கோவிலில் உள்ள ஆதிசங்கரர் சன்னதியில் நேற்று காலை சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

கோவிலில் உள்ள ஐம்பொன்னால் ஆன ஆதிசங்கரர் சிலைக்கு



சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு வழிபாடு நடந்தது. அதேபோல் காஞ்சிபுரம் சங்கர மடத்தில் உள்ள ஆதிசங்கரர் சன்னதியில் சிறப்பு மலர் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். மேலும் காஞ்சிபுரம் சங்கர மடத்தின் சார்பில் திருப்பதி, காலடி, காசி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் நாடு முழுவதும் ஆதிசங்கரருக்கு சிறப்பு ஆராதனைகள் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து நடந்த நிகழ்ச்சியில் காஞ்சி பாடசாலையில் 4 வேதங்கள் கற்ற 175 மாணவர்களுக்கு சான்றிதழ்களை சங்கராச்சாரியார் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வழங்கினார். இதுகுறித்து சங்கர மடத்தை சேர்ந்த ஒருவர் கூறும்போது, 'ஆதிசங்கரரின் 2532-வது ஆண்டு ஜெயந்தி விழா கொண்டாடப்படுகிறது. இதையொட்டி ஆந்திரா, தெலுங்கானாவை சேர்ந்த வேதபண்டிதர்கள், ஸ்ரீநகரில் உள்ள சங்கராச்சாரியா மலையிலும், புனேயை சேர்ந்தவர்கள் நேபாளத்திலும், தமிழகத்தை சேர்ந்தவர்கள் அமிர்தசரஸ் மற்றும் சண்டிகரிலும், புதுக்கோட்டையை சேர்ந்தவர்கள் சிக்கிமிலும் கூடி உள்ளனர். ஆதிசங்கரர் ஒருமைப்பாட்டுக்காக பாடுபட்டார்' என்றனர்.



காரைக்காலில் மதகடி, நேரு நகர், வடமட்டம் உள்ளிட்ட பகுதிகளில் மூன்றாம் பாலினத்தவர்கள் 27 பேர் வசித்து வருகிறார்கள். இவர்கள் நேற்று மாலை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கனை சந்தித்து, நாங்கள் அனைவரும் வாடகை வீட்டில் வசித்து வருகிறோம் என்றும் கூலி வேலை செய்து கொண்டு வாடகை கொடுப்பது மிகவும் சிரமமாக உள்ளதால் தாங்கள் தயவு கூர்ந்து எங்கள் மனுவை பரிசீளித்து எங்களுக்கு இலவச மனைப்பட்டா கொடுத்து உதவுமாறு மாவட்டஆட்சியரிடம் மனு அளித்தனர்.

# கருப்பாநதி அணை பகுதியில் 5 சென்டி மீட்டர் மழை பெய்தது

நெல்லை, ஏப்.26–

நெல்லை, தென்காசி மாவட்டங்களில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக மதிய நேரத்திற்கு பின்னர் பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. இதனால் வெப்பம் தணிந்து வருவதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நெல்லை மாவட்டத்தில் திங்கள்கிழமை புறநகர் பகுதிகளில் ஒருசில இடங்களில் சாரல் மழை பெய்தது. பேட்டை, அபிஷேகப்பட்டி, சீதபற்பநல்லூர் பகுதிகளில் சுமார் 1 மணி நேரம் கனமழை கொட்டி தீர்த்தது. மேலும் பயங்கர இடி - மின்னலும் இடித்தது. இதனால் சாலையோரங்களில் தண்ணீர் குளம்போல் தேங்கி கிடந்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக சேர்வலாறு அணை பகுதியில் 4 மில்லிமீட்டர் மழை பெய்தது. நெல்லை, பாளை பகுதியில் தலா 1 மில்லிமீட்டர் மழை பதிவாகியது. தென்காசி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டி அமைந்துள்ள சிவகிரியில் தொடர்ந்து ஒரு வாரமாக மாலை நேரங்களில் மழை பெய்து வருகிறது. சங்கரன்கோவிலில் சுமார் 1 மணிநேரம் மழை பெய்தது. அங்கு 15 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. அணை பகுதிகளை பொறுத்தவரை கருப்பாநதி அணை பகுதியில் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக கனமழை கொட்டித்தீர்த்தது. அங்கு நேற்று ஒரே நாளில் 5 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. தொடர்ந்து மாலை நேரங்களில் பெய்யும் மழையால் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் சற்று நிம்மதி அடைந்துள்ளனர்.

# செம்பனார்கோவில் வடக்கு, மத்திய ஒன்றியத்தில் திமுக வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்





செம்பனார்கோவில், ஏப். 26 –

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் சட்டமன்ற தொகுதி செம்பனார் கோவில் வடக்கு, மத்திய, கிழக்கு ஒன்றியங்களில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை மற்றும் பூத் கமிட்டிக் கூட்டம் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பூம்புகார் சட்டமன்ற தொகுதி பார்வையாளரும், மாநில இளைஞரணி திமுக துணை செயலாளர் இளையராஜா முன்னிலை வகித்தார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செம்பனார்கோவில் கீழ முக்கூட்டில் உள்ள அண்ணா திருமண மண்டபத்தில் செம்பை வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எம். அன்பழகன், திருக்கடையூர் தனியார் திருமண மண்டபத்தில் செம்பை மத்திய ஒன்றிய செயலாளர் அமுர்த.விஜயகுமார் செய்திருந்தனர்.

கூட்டத்தில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை மற்றும் புதியதாக ஒரு கோடி உறுப்பினர்களை சேர்ப்பது மற்றும் கட்சிப் பணி ஆற்றுவது குறித்தும் முடிவெடுக்கப்பட்டது, இந்நிகழ்ச்சிகளில் தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட திமுக துணை செயலாளர் மு.ஞானவேலன், செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.அப்துல்மாலிக், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விஜயபாலன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகே, பெரும்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட கூடப்பாக்கம் கிராமத்தில் முத்துமாரியம்மன் கோவிலில் நூதன பிம்ப பிரதிஷ்ட அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா நேற்று நடந்தது. சில ஆண்டுகளாக கோவில் புனரமைப்பு பணி நடைபெற்று பணிகள் நிறைவுற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. நேற்று முன் தினம் வேள்வி பூஜை உடன் தொடங்கி, யாகசாலையில் கலசங்கள் வைத்து, நான்கு கால பூஜைகள் நடைபெற்றன. நேற்று சிவாச்சாரியார்கள் தலைமையில் யாகசாலையில் இருந்து கலசம் புறப்பட்டு, கோவிலை வந்தடைந்தது. பின், வேத மந்திரங்கள் முழங்க, நாதஸ்வரம் ஒலிக்க, முத்துமாரி அம்பிகைக்கும், கோபுர கலசத்திற்கும், உற்சவர் சிலைக்கும் புனித நீரால் மஹா கும்பாபிஷேகம் நடந்தது.

# சீர்காழி திருமுலைப்பால் திருவிழா எளிமையான முறையில் உள் பிரகாரம் மண்டபத்தில் நடைபெற்றது: தருமபுரம் ஆதீன மடாதிபதி உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு



சீர்காழி, ஏப். 26 –

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் பழமையான பிரசித்தி பெற்ற பிரம்மபுரீஸ்வரர் உடனாகிய பெரியநாயகி அம்மன், சட்டநாதர் ஆலயம் அமைத்துள்ளது. இந்த சட்டநாதர்கோவில் பிரம்ம தீர்த்த குளக்கரையில், திருஞானசம்பந்தருக்கு அம்பாள் ஞானப்பால் வழங்கியதாக ஐதீகம்.

அதன்படி ஆண்டுதோறும் சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று திருமுலைப்பால் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு திருமுலைப்பால் விழா நேற்று நடைபெற்றது. வழக்கமாக பல்லாயிரக்கணக்கான பக்தர்களுடன் பிரம்ம தீர்த்த குளக்கரையில் நடைபெறும் இந்த விழா, கும்பாபிஷேகம் நடைபெறுவதை முன்னிட்டு எளிமையாக நடைபெற்றது. விழாவையொட்டி ஞானசம்பந்தர் உள்பிரகார மண்டபத்தில் எழுந்தருளினார்.

ஆலயத்தின் உள்ளே அமைந்துள்ள மலைக்கோயில் எனப்படும் தோனியப்பர் ஆலயத்தில் இருந்து வெள்ளி குடத்தில் ஞானப்பால் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு தங்க பொற்கிண்ணத்தில் திருஞான சம்பந்தருக்கு வழங்கப்பட்டது.

தொடர்ந்து பஞ்சமூர்த்திகளுக்கு மகா தீபாராதனை செய்யப்பட்டு விழா நடைபெற்றது. தருமபுரம் ஆதீன 27 வது மடாதிபதி சிவ ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் உள்ளிட்ட திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

## பொதுமக்களுக்கு விரைந்து கடன்கள் வழங்க

# வங்கி மேலாளர்களுடன் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் ஆலோசனை



காரைக்கால், ஏப். 26 –

காரைக்கால் மாவட்டத்தில் வங்கிகள் மூலம் பயனாளிகளுக்கு கிடைக்க கூடிய மத்திய, மாநில அரசு திட்டங்களின் கடன்கள் விரைவாக பயனாளிகளுக்கு கிடைக்கும் வகையில் காரைக்கால் மாவட்ட நிர்வாகம் காரைக்காலில் அமைந்துள்ள 53 வங்கி மேலாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையில் பெருந்தலைவர் காமராஜர் நிர்வாக வளாகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 2019 முதல் 2023 வரை பெறப்பட்ட பல்வேறு திட்டங்களுக்கான லோன் அப்ளிகேஷன்களை விரைந்து முடித்து பயனாளிகளுக்கு கிடைக்கும்படி மாவட்ட ஆட்சியர் வங்கி மேலாளர்களை கேட்டுக் கொண்டார். வங்கிகள் தரப்பில் ஆர்பிஜ மூலம் சிபில் ஸ்கோர் மற்றும் ஆதார் கார்டு, பான் கார்டு போன்றவற்றை ஆய்வு செய்ய சொல்லியுள்ளார்கள் என்றும், ஆய்வு முடித்த பின்னர் விரைவில் பயனாளிகளுக்கு லோன்கள் வழங்கப்படும் என வங்கி மேலாளர்கள் கூறினார்கள்.

மாவட்ட ஆட்சியர் பேசுகையில், விரைவாக இதை எல்லாம் சரி செய்து பயனாளிகளுக்கு விரைவில் கடன் கிடைக்க ஆவண செய்யும்படி கேட்டுக் கொண்டார். மேலும் எந்தெந்த வங்கிகளில் எவ்வளவு கடன் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளது என்பது குறித்தும் ஆலோசனை நடைபெற்றது.

இந்நிகழ்வில் மீன்வளத்துறை துணை இயக்குனர், கால்நடை பராமரிப்பு துறை துணை இயக்குனர் மற்றும் காரைக்கால் நகராட்சி ஆணையர், வட்டார வளர்ச்சி அதிகாரி, சமூக நலத்துறை உதவி இயக்குனர் மற்றும் இத்திட்டத்தில் பயனுள்ள அரசு அதிகாரிகள், நபார்டு வங்கி மற்றும் முன்னனி வங்கி மேலாளர்கள் கலந்து கொண்டார்கள்.

# "அலையாத்தி காடுகளை பாதுகாப்போம்" சந்திரபாடி கடலோர கிராமத்தில் விழிப்புணர்வு பேரணி



தரங்கம்பாடி, ஏப்.26–

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி அருகேயுள்ள கடலோர கிராமமான சந்திரபாடியில் உலக புவி நாளையொட்டி நேச்சுர் என்விரோன்மென்ட் அண்ட் வில்டிஃபி சொசைட்டி (NEWS) என்கிற தன்னார்வ அமைப்பு சார்பில் அலையாத்தி காடுகளை பாதுகாப்போம் என்கிற விழிப்புணர்வு பேரணி ஊராட்சிமன்ற தலைவர் ராஜ்குமார் தலைமையில் நடைப்பெற்றது.

சந்திரபாடி அரசினர் உயர் நிலை பள்ளி அருகிலிருந்து துவங்கிய பேரணியில் 200 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள், சமூக ஆர்வலர்கள், கிராம பொறுப்பாளர்கள், பொதுமக்கள், தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் கலந்துக்கொண்டு விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு ஊரின் முக்கிய வீதிகள் வழியாக பேரணியாக வந்தனர்.

முன்னதாக அலையாத்தி காடுகளை பாதுகாப்போம் என்ற விழிப்புணர்வு பலகையையும், அமைப்பின் பலகையையும் ஊராட்சி தலைவர் திறந்து வைத்தார். சிறுவர்கள் மற்றும் சமூக அமைப்பின் உறுப்பினர்கள் (NEWS ) ஒன்றிணைந்து அலையாத்தி காடுகளின் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் அலையாத்தி காடுகள் சந்திக்கும் ஆபத்துகள் பற்றி நியூஸ் அமைப்பின் திட்ட மேலாளர் கெனி மற்றும் வாழ்வாதார மேம்பாடு அதிகாரி எஸ்.அந்தோணிசாமி, பள்ளியின் தலைமையாசிரியர் நவநீதகிருஷ்ணன் உள்ளிட்டோர் விளக்க உரையாற்றினர்.

அலையாத்தி காடுகள் வளர்ப்பில் கிராம மக்களின் பங்களிப்பு மற்றும் கிராமத்திற்கும், நாட்டிற்கும் கிடைக்கும் பயன்கள் பற்றியும் நிகழ்ச்சியில் விவாதிக்கப்பட்டது.

# வைத்தீஸ்வரன்கோயிலில் நகரத்தார் குலதெய்வ வழிபாடு, பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நடைபயணமாக வந்து வேண்டுதல்



சீர்காழி, ஏப். 26 –

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அருகே வைத்தீஸ்வரன் கோவிலில் தையல்நாயகி அம்மன் உடனாகிய வைத்தியநாத சுவாமி கோவில் அமைந்துள்ளது. நவகிரகங்களில் இக்கோவில் செவ்வாய் ஸ்தலமாகவும் இருந்து வருகிறது.

சிறப்புமிக்க இக்கோயிலில் அருள்பாலிக்கும் தையல் நாயகி அம்மனை தங்களது குலதெய்வமாக கொண்டு வழிபடும் நகரத்தார் மக்கள் ஆண்டுதோறும் சித்திரை மாதம் 2 ஆவது செவ்வாய்கிழமை நடைபெறும் நகரத்தார் வழிபாட்டிற்க்கு பல்வேறு கிராமத்தில் இருந்து பல கிலோ மீட்டர் தொலைவிற்கு மாட்டு வண்டி மூலமும், நடைபயணமாகவும் வைத்தீஸ்வரன் கோவிலுக்கு வருகை புரிந்து சுவாமிகளை வழிபாடு செய்வது வழக்கம்.

பூம்புகாரை பூர்விகமாக கொண்ட நகரத்தார் மக்கள் சுனாமிக்கு பிறகு காரைக்குடி, கீழச்சிவல்பட்டி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சி, புதுகோட்டை, பட்டுகோட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டத்தில் குடியேறி வசித்து வருகின்றனர். பல தலைமுறைகளாக தொடரும் இந்த வழிபாடு செய்வதற்காக நேற்று மாலை முதல் வைத்தீஸ்வரன் கோவில் பகுதியில் குவிந்தனர்.

தங்கள் குலதெய்வமான தையல்நாயகி அம்மனுக்கு சீர்வரிசை பொருட்களை எடுத்துக் கொண்டு பாதயாத்திரையாகவும், மாட்டு வண்டி மூலமும் வைத்தீஸ்வரன் கோவில் பகுதிக்கு வந்தடைந்த மக்கள் சித்திரை 2 ஆம் செவ்வாய்கிழமையான நேற்று அம்மனை வழிபட்டு தாங்கள் வேண்டி எடுத்து வந்த வழித்துணை வேப்ப குச்சிகளை கோவில் கொடிமரம் அருகே போட்டு நேர்த்திக்கடனை செலுத்தி திரும்பிச் சென்றனர்.

நகரத்தார் வழிபாட்டை முன்னிட்டு வைத்தீஸ்வரன்கோயில் பகுதியில் சீர்காழி காவல் துணை கண்காணிப்பாளர் லாமேக் தலைமையில் 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# மயிலாடுதுறை மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட 60சதவீத விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவில்லை

## பி.ஆர்.பாண்டியன் குற்றச்சாட்டு



சீர்காழி, ஏப். 26 –

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழியில் தமிழக அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு பொதுச்செயலாளர் பி.ஆர்.பாண்டியன் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்பொழுது அவர் கூறுகையில், இந்தியாவில் பருவநிலை மாற்றம், வறட்சி, பருவம் தவறிய மழை போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும் வகையில் காப்பீட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் விவசாயிகளுக்கு பயனற்ற நிலையிலும், காப்பீட்டு நிறுவனங்களுக்கு சாதகமாகவுமே காப்பீட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. எனவே இதில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த ஆண்டு பெய்த மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த பயிர்கள் தரங்கம்பாடி, சீர்காழி வட்டங்களில் முழுவதும் சேதமடைந்தன. இதையடுத்து காப்பீட்டு நிறுவனங்கள் மூலமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ.8 ஆயிரம் இழப்பீடு வழங்க கணக்கிடப்பட்டு அதற்குரிய நிதியை மத்திய, மாநில அரசுகள் விடுவித்துள்ளன. ஆனால் இதுவரை 60 சதவீத விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் விவசாயிகள் வங்கிகளில் பெற்ற விவசாயக் கடனை தள்ளுபடி செய்ய இதுவரை தமிழக அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடனடியாக விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் பெற்றுள்ள கடனை ரத்து செய்ய தமிழக அரசு முன்வர வேண்டும். நிதி பற்றாக்குறையை காரணம் காட்டி தொடர்ந்து விவசாயிகள் பெற்று வருகிற சலுகைகளை பறிப்பதும், விவசாயிகளின் பாதிப்புகளை மூடி மறைக்க முயற்சிப்பதும் தமிழக அரசுக்கு அவப்பெயரை உருவாக்கும்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக அறிவித்த திட்டங்கள் விவசாயிகளை சென்றடைந்துள்ளதா என்பதை முதல்வர் ஆய்வு செய்ய வேண்டும். இது தொடருமேயானால் தமிழக அரசுக்கு எதிராக மீண்டும் மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

காப்பீட்டு திட்டத்தில் பிரீமியம் தொகையை செலுத்துகிறபோது, விவசாயிகள் அளிக்கும் சான்றுகளில் தவறுகள் ஏதேனும் இருந்தால், அதனை உடனடியாக திருத்தம் செய்து பிரீமியம் தொகையை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் இழப்பீட்டு தொகை கொடுக்கும்போது சான்றுகள் தவறாக உள்ளது என்று கூறி இழப்பீட்டு தொகை கொடுக்காமல் நிறுத்தி வைப்பது விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. இது குறித்து அரசு விரிவாக ஆய்வு செய்ய வேண்டும் என்றார்.

# மலேரியாவை அறவே ஒழிப்போம்: காரைக்கால் நலவழித்துறையினர் உறுதிமொழி ஏற்பு



காரைக்கால், ஏப். 26 –

ஒவ்வொரு ஆண்டும் ஏபரல் 25 ஆம் தேதி மலேரியா ஒழிப்பு தினமாக அறிவிக்கப்பட்டு உலகமெங்கும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதை முன்னிட்டு காரைக்கால் நலவழித்துறையின் மூலம் கொசு மற்றும் பூச்சிகளால் ஏற்படும் நோய் தடுப்பு திட்டத்தின் சுகாதர ஆய்வாளர்கள், சுகாதார உதவியாளர்கள் மற்றும் கிராமப்புற செவிலியர்கள் நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர் சிவராஜ்குமார் தலைமையிலும், மலேரியா தொழில்நுட்ப உதவியாளர் சீ.சேகர் முன்னிலையிலும் மலேரியாவை முற்றிலும் ஒழிப்போம், கொசுக்களை அழிப்போம்என்றஉறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்

மலேரியா என்றநோயினை கொசுக்கள் பரப்புகிறது. கடந்த இரண்டு வருடமாக காரைக்கால் மாவட்டத்தில் மலேரியா காய்ச்சலால் யாரும் பாதிக்கப்படவில்லை என்றும், மலேரியா காய்ச்சலை தடுப்பதற்கு ஒரே வழி அணபொலஸ் பெண் கொசுக்கள் வளர்வதையும், அது மனிதனை கடிப்பதையும் ஒழிக்க வேண்டும் என்று துணை இயக்குனர் வலியுறுத்தினார்.

மலேரியா தொழில்நுட்ப உதவியாளர்சேகர்கூறுகையில், அணபொலிஸ் கொசுக்கள் சுத்தமானநீரில்இனப்பெருக்கம் செய்யக்கூடியவை. அதனால் தான் மழைக்காலங்களில் மலேரியா காய்ச்சல் அதிகமாக தாக்குகிறது. காய்ச்சல் குளிருடன் இருந்தால் அது மலேரியா காய்ச்சலாக இருக்கலாம். ஆகவே காய்ச்சல் கண்டவுடன் அருகில் உள்ள மருத்துவமனையில் சென்று இரத்த தடவல் பரிசோதனை செய்துக்கொள்ள வேண்டும். மலேரியா காய்ச்சல் சரியானாலும் கல்லீரலில் தொடர்ந்து கிருமிகள் இருக்கும். எனவே மேலும் 14 நாட்களுக்கு மருந்து சாப்பிடுவது அவசியம். நம் வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக்கொண்டு நீர் தேங்காமல் பார்த்துக்கொண்டால் மலேரியாவை ஒழிக்கலாம். இந்த 2023 இல் மலேரியா இல்லாத நிலையை அடைய தற்போது அரசு எடுத்து வரும் அனைத்து கொசு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும் பொது மக்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்றார்.

# ஆரணி ஸ்ரீ காஞ்சி சங்கர மடத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு ருத்ராபிஷேகம்



திருவள்ளூர், ஏப். 26 –

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி எஸ்.பி.கோவில் தெருவில் ஸ்ரீ காஞ்சி சங்கர மடம் உள்ளது. இங்கு நேற்று ஸ்ரீ ஆதிசங்கரர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் சார்பில் ஸ்ரீ ஆதிசங்கரருக்கு சிறப்பு ஹோமங்கள், சிறப்பு பூஜைகள் உள்ளிட்டவை நடைபெற்றது. நேற்று காலை 7 மணிக்கு ருத்ராபிஷேகம் நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து மகா அலங்காரம், மகா தீபாராதனை, தீர்த்தம், பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதன் பின்னர், பத்து மணிக்கு பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நண்பகல் 12 மணிக்கு சர்க்கரைப் பொங்கல், சாம்பார் சாதம், தயிர் சாதம் உள்ளிட்டவைகள் அன்னதானமாக வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் ஆரணி சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காஞ்சி சங்கர மடம் நிர்வாகி ஸ்ரீதர் தலைமையில் நிர்வாகத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# ஸ்ரீ ஆதி லட்சுமி சமேத ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் திருக்கோவிலில் இராமானுஜர் திரு அவதார உற்சவ நிகழ்ச்சி

ஊத்துக்கோட்டை, ஏப். 26 –

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பஸ் நிறுத்தம் அருகே ஸ்ரீ ஆதி லட்சுமி சமேத ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் திருக்கோவில் உள்ளது.

இக்கோவிலில் நேற்று இராமானுஜர் திரு அவதார உற்சவ நிகழ்ச்சி நடைபெற்றது. இதை முன்னிட்டு நேற்று காலை விசேஷ அலங்கார திருமஞ்சனம், விசேஷ அலங்கார தரிசனம் உள்ளிட்டவை நடைபெற்றது.

இதன் பின்னர் பக்தர்களுக்கு தீர்த்தம், பிரசாதம், அன்னதானம் உள்ளிட்டவை விநியோகிக்கப்பட்டது. மாலை, பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ ராமானுஜர் மங்களகிரி வாகனத்தில் திருவீதி உலா வந்தார்.

# டி.ஜே.எஸ். மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விழா விஜய் டிவி கலக்கப்போவது யாரு? காமெடி கிங் கே.பழனி பங்கேற்பு



ஊத்துக்கோட்டை, ஏப். 26 –

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை அருகே பெருவாயலில் டி.ஜே. எஸ். மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியின் 8–வது ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கல்லூரியின் மேலாண்மை இயக்குனரும், செயலாளருமான டி.ஜே. ஆறுமுகம் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் டி.ஜே.தேசமுத்து, பள்ளியின் தாளாளர் டாக்டர் ஏ.பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைவரையும் கல்லூரியின் முதல்வர் எ.ஜெய்குமார் வரவேற்றார்.

இதில் சிறப்பு விருந்தினராக டி.ஜே. எஸ். கல்விக் குழுமத்தின் தலைவரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான கல்வி நெறி காவலர் டி.ஜே. கோவிந்தராஜன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக விஜய் டிவி கலக்கப்போவது யாரு? காமெடி கிங் கே.பழனி மற்றும் மோட்டிவேஷன் பேச்சாளரும், சமூக வலைதள பேச்சாளருமான பி.சசிலயா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு அறிவுரைகளை வழங்கி பேசினர்.

மேலும் கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கும், சிறப்பாக பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் நினைவு பரிசுகளை வழங்கினர். இதன் பின்னர் வரவேற்பு நடனம், பொது அறிவை வளர்க்கும் நாடகங்கள், வீர விளையாட்டாம் சிலம்ப விளையாட்டு உள்ளிட்டவைகளை மாணவர்கள் தத்ரூபமாக செய்தனர். நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளில், இயக்குனர்கள் ஏ.விஜயகுமார், ஏ.கபிலன், டி.தினேஷ், ஜி.தமிழரசன், உறுப்பினர்கள் எஸ்.சண்முகசுந்தரம், ஆர்.ஜெயக்குமார், ஏ.ராஜேஷ், ஆலோசகர் பி.ஞானப்பிரகாசம் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் நிர்வாக அதிகாரி எஸ்.ஏழுமலை நன்றி கூறினார்.

# அதிமுக ஆட்சியின் ஊழல்களை சிஏஜி அறிக்கை தெளிவுபடுத்தி உள்ளது அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி

சென்னை, ஏப்.26-

அதிமுக ஆட்சியில் இருந்த போது நெடுஞ்சாலை துறையை கையில் வைத்திருந்த எடப்பாடி பழனிசாமி, டெண்டர் முறைகேடுகளை செய்ததாக புகார் எழுந்தது. இது தொடர்பாக அவருக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இந்நிலையில், கடந்த அதிமுக ஆட்சியில் டெண்டர் தொடங்கி பல்வேறு விவரங்களில் முறைகேடுகள் செய்யப்பட்டு உள்ளதாக சிஏஜி அறிக்கை தெரிவித்து உள்ளது.

ஒரே ஐபி முகவரியில் இருந்து பல கம்பெனிகள் டெண்டர்களுக்கு விண்ணப்பம் செய்துள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலர் டெண்டருக்கு நெடுஞ்சாலைத்துறையின் கம்ப்யூட்டரில் இருந்தே விண்ணப்பம் செய்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிஏஜி அறிக்கை அம்பலப்படுத்தி உள்ள தகவல்கள் தொடர்பாக, அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று சென்னையில்



செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:- அதிமுக ஆட்சியில் பல்வேறு துறைகளில் ஊழல் நடந்துள்ளதை சிஏஜி அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது. அதிமுக ஆட்சியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு பெயர்களில் டெண்டர்களை கோரி உள்ளனர் என சிஏஜி தெரிவித்துள்ளது. நேர்மையான ஒப்பந்ததாரர்கள் ஏலத்தில் பங்கேற்பதை தவிர்க்க பல்வேறு முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறை, ஊரக வளர்ச்சித்துறையிலும் முறைகேடு நடந்துள்ளது. 60:40 என்ற மத்திய மாநில அரசுகளின் நிதியில் காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தில் முறைகேடு நடந்துள்ளது. காவல்துறை கட்டுப்பாட்டறை நவீன மயமாக்கும் திட்டத்தில் கடந்த அதிமுக அரசின் அலட்சியத்தால் காவல்துறைக்கு ரூ.14.37 கோடி வீண் செலவு ஏற்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கை கட்டி காக்கும் காவல்துறையை நவீனப்படுத்துவதில் அக்கறை செலுத்தாமல் இருப்பதில் கவனமாக இருந்திருக்கிறது அதிமுக அரசு. தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகத்தை அதிமுக அரசு தவறாக பயன்படுத்தி உள்ளது. கடந்த அதிமுக அரசில், இலவச லேப்டாப் திட்டத்தில் ரூ.68.50 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. காலணி வழங்கும் திட்டத்தில் ரூ.5.4 கோடி வீண் செய்யப்பட்டுள்ளது. 5.09 லட்சம் வீடுகள் கட்ட மத்திய அரசு ஒதுக்கிய நிலையில், அதிமுக அரசு முறைகேடு செய்துள்ளது. தமிழகத்தில் புகையிலைப் பொருட்கள் மீதான தடை நீடிக்கிறது. தடையை மீறுபவர்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், திருமணஞ்சேரி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில், தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சி நேற்று நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட வெள்ளியங்குன்றம் புதூரில் புதிய தார் சாலை அமைப்பதற்கான பூமி பூஜையில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை பி.மூர்த்தி கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார். சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# பொன்னமராவதியில் நவீன வசதிகளுடன் மீனாட்சி பெரியண்ணன் மருத்துவமனை திறப்பு விழா

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், எஸ்.ரகுபதி பங்கேற்பு

பொன்னமராவதி, ஏப் .26-

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பி.எஸ்.என்.எல், எக்சேஞ்ச் எதிரில் மீனாட்சி பெரியண்ணன் மருத்துவமனை புதிதாக அமைக்கப்பட்டது. இதன் திறப்பு விழா நடைபெற்றது. மீனாட்சி பெரியண்ணன் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் எஸ். பெரியண்ணன் செட்டியார் வரவேற்றார், இதனைத் தொடர்ந்து தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார், சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் கலந்து கொண்டு மருத்துவமனையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார் .



இதில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லா ,கலெக்டர் கவிதா ராமு, சட்டமன்றஉறுப்பினர் சாக்கோட்டை அன்பழகன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர், மேலும் மீனாட்சி பெரியண்ணன் மருத்துவமனை பொன்னமராவதியில் உள்ள அதி நவீன வசதிகளுடன் கூடிய 50 படுக்கைகள் கொண்ட பல நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனையாக அமைந்துள்ளது. இதில் இரண்டு மாடுலர் ஆப்ரேஷன் தியேட்டர்கள், சி.டி. ஸ்கேன் வசதி இ.சி.ஜி. எக்கோ, ட்ரெட் மில் டெஸ்ட்,அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே ,லேப் டயாலிசிஸ், ஐ.சி.யு. புற நோயாளிகள் பிரிவு, உள் நோயாளிகள் பிரிவு, என பல நவீன வசதிகளுடன் கூடிய அனைத்து வசதிகளும் இடம்பெற்றுள்ளன.

# தென்காசி இசக்கி வித்யாஷ்ரம் பள்ளியில் கால்பந்தாட்ட போட்டி

தென்காசி, ஏப்.26-

தென்காசி இசக்கி வித்யாஷ்ரம் பள்ளியில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு இடையிலான ஐவர் கால்பந்தாட்ட போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் மூன்று மாவட்டத்தில் இருந்து 23 பள்ளிகள் கலந்து கொண்டனர், இப்போட்டியை பள்ளியின் முதல்வர் மோனிகா டி சோஷா துவக்கி வைத்தார்.



இப்போட்டியின் இறுதியில் தென்காசி மாவட்ட கால்பந்து கழக பொருளாளர் மைதீன், மற்றும் காவல் உதவி ஆய்வாளர் சாந்தி ஆகியோர் கலந்துகொண்டு டோனாவூர் சந்தோஷ் வித்யாலயா முதலிடமும், தூத்துக்குடி புனித மைக்கேல் பள்ளி இரண்டாமிடமும், தென்காசி நியூ கேலக்ஸ், நெல்லை பெல் ஸ்கூல் ஆகிய பள்ளிகள் மூன்றாவது இடத்தை பிடித்தது, வெற்றி பெற்ற அணிகளுக்கு ரம்ஜான் கால்பந்து கோப்பையையும், பரிசுகளையும் மாணவர்களுக்கு வழங்கினர். இந் நிகழ்ச்சி ஏற்பாடுகளை உடற்கல்வி ஆசிரியர் பாலமுருகன், ஸ்டீபன், மகாலட்சுமி, சோபியா, வைஷ்ணவி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# உளுந்தூர்பேட்டை ரோட்டரி சங்கம் சார்பில் தீயணைப்பு துறையினருக்கு பாம்பு பிடிக்கும் கருவிகள் வழங்கல்

கள்ளக்குறிச்சி, ஏப்.26_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை ரோட்டரி சங்கம் சார்பில், வெயிலின் தாக்கம் அதிக அளவில் உள்ளதால் விஷப் பாம்புகள் பொதுமக்கள் குடியிருப்பு பகுதிகளில் அதிக அளவில் வருவதால், விஷப் பாம்புகளை பிடிப்பதற்காக தீயணைப்பு நிலையத்திற்கு இரண்டு பாம்பு பிடிக்கும் கருவிகளை ரோட்டரி சங்க மாவட்ட ஆளுநர் சரவணன், உதவி ஆளுநர் இளங்கோவன் ஆகியோர் முன்னிலையில் தீயணைப்பு நிலைய அலுவலர் பொறுப்பு ரமேஷ், உதவி அலுவலர் சக்திவேல் ஆகியோரிடம் வழங்கப்பட்டன, இதனைத் தொடர்ந்து உளுந்தூர்பேட்டையை அடுத்த ஏ.குமாரமங்கலம் கிராமப்பகுதியில் உள்ள அரசு



மாதிரி மேல்நிலைப் பள்ளி எதிரில் நெடுஞ்சாலையில் வைப்பதற்காக இரண்டு பேரிகார்டுகளை உளுந்தூர்பேட்டை உட்கோட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் மகேஷிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது ரோட்டரி சங்கத் தலைவர் தெய்வீகன், செயலாளர் ராஜேந்திரன், பொருளாளர் பாபு, மாவட்ட திட்டத் தலைவர் வின்சென்ட், மண்டலத் தலைவர்கள், திட்டத் தலைவர்கள் அன்பழகன், திலீப், வெங்கடாஜலபதி, வருங்கால உதவி ஆளுநர் அன்பழகன், சாசனத் தலைவர் வசந்தகுமார் வருங்காலத் தலைவர் செந்தில்குமார், பொருளாளர் வெங்கடேஷ், முன்னாள் பொருளாளர் சீனிவாசன், முன்னாள் தலைவர்கள் சுரேஷ்குமார், முன்னாள் செயலர்கள் முத்துக்குமாரசாமி, அருள், சாமிநாதன், ஜீவரத்தினம் மற்றும் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மற்றும் காவல்துறை போக்குவரத்து ஆய்வாளர் கோவிந்தசாமி உதவி ஆய்வாளர் மணிவண்ணன், தீயணைப்பு துறை வீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



அரியலூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் அரியலூர் மாவட்ட நிர்வாகம், தமிழ்ப் பண்பாட்டுப் பேரமைப்பு மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்தும் 7-வது புத்தகத் திருவிழாவில் செல்லப் பிராணிகள் கண்காட்சி (நாய்கள்) நிகழ்ச்சியில் கலந்து கொண்ட காவல்துறையின் மோப்பநாய் பரிவுக்கு பரிசுகளும் பாராட்டு சான்றியதழ்களையும் அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா வழங்கினார்.

# தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில்

# முழு நேர நூலக கட்டிடத்திற்கு தூத்துக்குடி எம்பி கனிமொழி அடிக்கல் நாட்டி கல்வெட்டினை திறந்து வைத்தார்

தென்காசி,ஏப்.26-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் முழு நேர நூலக கட்டிடத்திற்கு தூத்துக்குடி எம்பி கனிமொழி கருணாநிதி அடிக்கல் நாட்டி, கல்வெட்டினை திறந்து வைத்தார். தமிழகத்தில் முதல்முறையாக சங்கரன்கோவில் முழு நேர நூலக கட்டிடம் தென்காசி எம்பி தனுஷ் குமார் நிதியிலிருந்து ரூ- 30 லட்சமும், சங்கரன்கோவில் எம்எல்ஏ ராஜா நிதியிலிருந்து ரூ- 20 லட்சமும் சேர்த்து ரூ-50 லட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டப்பட உள்ளது, இதன் மூலம் இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும் சங்கரன்கோவில் நூலக நண்பர்கள் திட்டத்தினை தொடங்கி வைத்து தன்னார்வலர்களுக்கு ஐடி கார்டு கனிமொழி எம்பி வழங்கினார்.



இவ்விழாவில் கனிமொழி எம்பி 146-வது புறவலராகவும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 147-வது புறவலராகவும், பிரம்ம நாயகம் 148-வது புறவலராகவும் இணைந்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன், தென்காசி எம்பி தனுஷ் குமார், சங்கரன்கோவில் எம்எல்ஏ ராஜா, வாசுதேவநல்லூர் எம்எல்ஏ சதன் திருமலை குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் யூ எஸ் டி சீனிவாசன், மாவட்ட ஊராட்சிமன்றத் தலைவி தமிழ்ச்செல்வி, புளியங்குடி நகர மன்றத் தலைவி விஜயா சௌந்தரபாண்டியன், உமா மகேஸ்வரி, சேர்மன் லாலா சங்கர பாண்டியன், முதன்மை கல்வி அலுவலர் கபீர், பொறியாளர் அழகர்சாமி, புளியங்குடி நகரச் செயலாளர் அந்தோணிசாமி, பொண்ணு துரைச்சி, உமா மகேஸ்வரி, காந்திமதி அம்மாள், மேல நீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரிய துரை, முன்னாள் எம்எல்ஏ முத்துச்செல்வி, முன்னாள் எம்பி விசிலா சத்யானந்த், விஜயா பாண்டியன், நகரச் செயலாளர் பிரகாஷ், மாவட்ட பொருளாளர் சரவணன், மக்கள் தொடர்பு உதவி அலுவலர் ராமசுப்பிரமணியன் ஆகியோர் நூலக அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டனர்.



திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயில் தேரோட்டம் வருகின்ற 03.05.2023 அன்று நடைபெறுவதை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் மற்றும் தேரோடும் வீதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார் நேற்று, நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் உதவி ஆணையர் செயல் அலுவலர் ஹரிஹரசுப்பிரமணியன், மாநகராட்சி உதவி ஆணையர் ரவி, காவல் துணை ஆணையர் அன்பு, காவல் உதவி ஆணையர் செல்வி நிவேதா லட்சுமி, மாவட்ட அலுவலர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அனுசியா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.



தென்காசி மாவட்டம் தென்காசி சிதம்பர சுபா லூமினஸ் மழலையர் தொடக்கப்பள்ளி வடக்கு மாட வீதியில் மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. அறிவியல் கண்காட்சி மற்றும் கல்விக்கான பரிசும், 100% வருகை பதிவு புரிந்த மாணவர்களுக்கு பரிசளிக்கும் விழா பள்ளி தாளாளர் ஜெயலெட்சுமி சாமி தலைமையில் நடைபெற்றது,இவ் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தென்காசி நகர் மன்றத் தலைவரும், திமுக நகரச் செயலாளருமான சாதிர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர், சிறப்பு விருந்தினர் சாதிர்-க்கு பள்ளி தாளாளர் நினைவு பரிசு வழங்கினார், மேலும் பள்ளியில் பயிலும் 150 மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள், இந்நிகழ்ச்சியை பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் மாணவர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

# சிறுவாணி விவகாரத்தில் கேரள அரசின் அத்துமீறலுக்கு திமுக அரசு துணைபோவதாக சீமான் குற்றச்சாட்டு

சென்னை , ஏப்.26-

"காவிரி நதிநீரைத் தரமறுக்கும் கர்நாடக மாநில பாஜக அரசின் அத்துமீறலுக்குத் துணைபோகும் தமிழ்நாடு பாஜகவின் துரோகத்திற்குச் சற்றும் குறைவில்லாதது, சிறுவாணிநதிநீரைத்தடுக்கும் கேரள மாநில கம்யூனிஸ்ட் அரசின் அத்துமீறலுக்குத் துணைபோகும் திமுக அரசின் பச்சைத் துரோகம்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "சிறுவாணி ஆற்றின் குறுக்கே அடுத்தடுத்து3 தடுப்பணைகள் கட்டும் கேரள மாநில மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசின் நடவடிக்கை பெரும் அதிர்ச்சியளிக்கிறது. கேரள அரசின் எதேச்சதிகாரப் போக்கினைத் தடுக்கத் தவறி, வேடிக்கைப் பார்க்கும் திமுக அரசின் அலட்சியப்போக்கு வன்மையான கண்டனத்திற்குரியது.

உலகின் மிகச் சுவையான நன்னீர் ஆறுகளில் ஒன்றான சிறுவாணி ஆறு கோவை மாவட்டத்தின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றுவதில் முக்கியப் பங்காற்றுகிறது. ஆனால், அதனைக் கெடுக்கும் வகையில் கேரள மாநில அரசு சிறுவாணி ஆற்றின் குறுக்கே கூலிக்கடவு சித்தூர் சாலையில் தற்போது புதிய தடுப்பணையைக் கட்டி முடித்துள்ளதுடன், மேலும் 2 இடங்களில் தடுப்பணைகளைக் கட்ட தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால் சிறுவாணி ஆற்றுநீர் உரிமை முற்று முழுதாகக் கானல் நீராகி, கோவையில் மிகப்பெரிய குடிநீர் பஞ்சம் ஏற்படக்கூடிய பேராபத்து ஏற்பட்டுள்ளது.

இரு மாநிலங்களுக்கு இடையிலான நதியின் குறுக்கே, எந்த ஒரு மாநிலமும் மற்றொரு மாநிலத்தின் ஒப்புதலின்றித் தன்னிச்சையாக எவ்வித அணையும் கட்டமுடியாது என்பதை உச்சநீதிமன்றம் பலமுறை தனது தீர்ப்புகளில் தெளிவுபடுத்தியுள்ளது. அதுமட்டுமின்றி, சிறுவாணி ஆறானது காவிரி



மேலாண்மை ஆணையத்தின் கீழ் வரும் நிலையில் கேரள மாநில கம்யூனிஸ்ட் அரசு தமிழ்நாடு அரசின் ஒப்புதலின்றி முறைகேடாகத் தடுப்பணைகளைக் கட்டிவருவது அப்பட்டமான நதிநீர் சட்ட விதிமீறலாகும்.

ஏற்கெனவே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கேபுதியதடுப்பணையை கர்நாடக மாநில அரசு கட்டிமுடித்தபோது, அதுகுறித்துத் தனக்கு எதுவும் தெரியாது என்று திமுக அரசு கைவிரித்த நிலையில், தற்போது கேரள அரசு சிறுவாணி ஆற்றின் குறுக்கே கட்டியுள்ள தடுப்பணையின் 90 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், அதுகுறித்தும் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறுவது திமுக அரசின் நிர்வாகத் திறமையின்மையையே வெளிக்காட்டுகிறது. அதுமட்டுமின்றி, கேரள மாநில அரசு சிறுவாணி ஆற்றின் கொள்ளளவை 50 கன அடியிலிருந்து 45 கன அடியாக ஏற்கெனவே குறைத்துள்ளதோடு, கோடைக்காலத்தில் நீர் எடுக்கும் சிறுவாணி ஆற்றின் சுரங்கப்பாதையையும் சிறிதும் மனிதத் தன்மையின்றி மூடியுள்ளது பினராயி விஜயன் தலைமையிலான கேரள மாநில கம்யூனிஸ்ட் அரசு.

கேரள முதல்வர் பினராயி விஜயனுடன் நெருங்கிய நட்பு பாராட்டி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியுடன் கூட்டணியில் உள்ள திமுக அரசு, தமிழ்நாட்டின் உரிமையைப் பறிக்கும் கேரள மாநில அரசின் அத்துமீறலை இதுவரை கண்டிக்காதது ஏன்? கேரள அரசு மீது எவ்வித நடவடிக்கையும், சட்ட நடவடிக்கையும் இதுவரை எடுக்காதது ஏன்? காவிரி நதிநீரைத் தரமறுக்கும் கர்நாடக மாநில பாஜக அரசின் அத்துமீறலுக்குத் துணைபோகும் தமிழ்நாடு பாஜகவின் துரோகத்திற்குச் சற்றும் குறைவில்லாதது, சிறுவாணிநதிநீரைத்தடுக்கும் கேரள மாநில கம்யூனிஸ்ட் அரசின் அத்துமீறலுக்குத் துணைபோகும் திமுக அரசின் பச்சைத்துரோகம்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணைகட்டும் கர்நாடக அரசு, பாலாற்றின் குறுக்கே தடுப்பணைகளைக் கட்டும் ஆந்திர அரசு, சிறுவாணி ஆற்றின் குறுக்கே தடுப்பணைகளைக் கட்டும் கேரள அரசு என்று, ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தமிழ்நாட்டின் நதிநீர் உரிமைகளை ஒவ்வொன்றாய் தாரைவார்ப்பதற்குப் பெயர்தான் திமுக அரசின் திராவிட மாடலா? என்ற கேள்வியும் எழுகிறது.

ஆகவே, சிறுவாணி ஆற்றின் குறுக்கே தடுப்பணைகளைக் கட்டி கோவையைப் பாலைவனமாக்கும் கேரள அரசின் எதேச்சதிகாரப் போக்கிற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் உடனடியாக வழக்கு தொடர்ந்து, சமரசமற்ற சட்டப்போராட்டம் நடத்தி தமிழர்களின் நதிநீர் உரிமை பறிபோகாமல் பாதுகாக்க வேண்டுமென தமிழ்நாடு அரசினை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்" என்று சீமான் கூறியுள்ளார்.

# சத்திரப்பட்டியில் நடைபெற உள்ள ஜல்லிக்கட்டு போட்டியில்

# சிறந்த மாடுபிடி வீரருக்கும் சிறந்த காளை உரிமையாளருக்கும் கார் பரிசாக வழங்கப்பட உள்ளது : அமைச்சர் மூர்த்தி பேட்டி

*மதுரை, ஏப்.26-*

*தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 70 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சத்திரப்பட்டியில் ஏப்-30ம் தேதி ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற உள்ளது. இந்த நிலையில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும் சத்திரப்பட்டி பகுதியில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி நேற்று ஆய்வு செய்தார் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசும் போது,*



*தமிழக முதலமைச்சர் 70வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை சத்திரப்பட்டியில் வரும் 30ம் தேதி ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற உள்ளது, இந்த போட்டியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட காளைகள் மற்றும் தமிழகத்திலிருந்து ஏராளமான மாடுபிடி வீரர்களும் இந்த ஜல்லிக்கட்டுபோட்டியில் பங்கேற்க உள்ளார்கள். ஜல்லிக்கட்டு போட்டியில் சிறப்பாக விளையாடும் மாடுபிடி வீரருக்கு முதல் பரிசாக கார் வழங்கப்படுகிறது, இரண்டாவது பரிசாக புல்லட் பைக், மூன்றாவது பரிசாக ஹீரோ ஹோண்டா பைக் வழங்கப்பட உள்ளது.*

*அதேபோல் சிறப்பாக விளையாடும் மாட்டின் உரிமையாளருக்கு முதல் பரிசாக கார் பரிசாக வழங்கப்படும், இரண்டாவது பரிசாக புல்லட் வாகனம், மூன்றாவது பரிசாக ஹீரோ ஹோண்டா பைக் வழங்கப்படும், அதேபோல் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறப்பு விருந்தினர்களாக தமிழக அமைச்சர்கள் பலர் அழைக்கப்பட உள்ளனர் எனவும் தமிழகத்திலேயே மிகச்சிறந்த முறையில் சத்திரப்பட்டி ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்படும் என வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு துறை அமைச்சர் மூர்த்தி தெரிவித்தார்.*

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# மல்யுத்த வீராங்கனைகளின் குற்றச்சாட்டு டெல்லி போலீசுக்கு உத்தரவு

# தூத்துக்குடியில் மணல் கொள்ளையர்களால் விஏஓ படுகொலை





# அதிமுக ஆட்சியின் ஊழல்களை சிஏஜி அறிக்கை தெளிவுபடுத்தி உள்ளது


| சென்னை / புதுக்கோட்டை | 26.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஐ. எக்ஸ். பெரைரா , இலங்கை மலையகத் தமிழ் அரசியல்வாதி, தொழிலதிபர் (பி.1888) (இ.1951)



தி. க. சண்முகம் , தமிழக நாடக, திரைப்பட நடிகர், அரசியல்வாதி (பி.1912) (இ.1973)



நீல பத்மநாபன் , தமிழக எழுத்தாளர் (பி.1938)



சமுத்திரக்கனி , தமிழகத் திரைப்பட இயக்குநர் (பி.1973)



## இன்றைய நினைவு நாள்

சீனிவாச இராமானுசன் , இந்தியக் கணிதவியலாளர் (பி.1887) (இ.1920)



ஹரி சிங், இந்தியாவின் சம்மு காசுமீர் சுதேச சமத்தானத்தின் இறுதி டோக்ரா குல மன்னர் (பி.1895) (இ.1961)



ந. சிதம்பர சுப்பிரமணியன் , தமிழக எழுத்தாளர் (பி.1912) (இ.1977)



## அறிவுசார் சொத்துரிமை நாள்